Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 118

சனிக்கிழமை
23 மார்ச் 2024

பங்குனி 10 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"உவர் ரணிலார் காணிக்கும் காவல் ஆமிக்கும் சப்போர்ட் எண்டுதான் பிளான் போடுறார்"




விடுவிக்கப்பட்ட காணிகளில்

# பொதுமக்கள் விவசாயம்: ஆனால் முப்படையும் தலையிடும்!

## ஜனாதிபதி ரணிலின் விநோதக் கையளிப்பு

கொழும்பு, மார்ச் 23

யாழ்ப்பாணம் - வலி.வடக்கில் விவசாய நடவடிக்கைகளுக்காக நேற்று விடுவிக்கப்பட்ட காணிகளில், பொதுமக்களுக்கும் விவசாயிகளுக்கும் ஒத்தாசையாக முப்படையும் செயற்படும் என்று ஜனாதிபதி ரணில் அறிவித்துள்ளார்.

11

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில்

## அவசர சிகிச்சைப்பிரிவு; ரணில் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் நெதர்லாந்து அரசாங்கத்தின் இலகு கடன் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட நவீன வசதிகளுடன் கூடிய விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு கட்டடத் தொகுதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் இலங்கைக்கான

11

## முதலீட்டு வலயங்களுக்கு வடபகுதியில் காணிகள்!

ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

வடக்கு மாகாணத்தில் முதலீட்டு வலயங்களுக்காக காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வலி.வடக்கில் நேற்று இடம்பெற்ற காணி வழங்கும் நிகழ்வில் வைத்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

11

பால் புரைக்கேறி

## பெண் சிசு சாவு!

யாழ்ப்பாணம், மார்ச் 23

பால் புரைக்கேறியதால், பிறந்து 28 நாள்களேயான பெண் சிசுவொன்று உயிரிழந்துள்ளது.

சசிகுமார் பிரதீபா என்ற அந்தச் சிசுவுக்கு, தாயார் நேற்று மதியம் பாலூட்டியுள்ளார். இதன்போது குழந்தை திடீரென மயக்கமடைந்துள்ளது. அந்தச் சிசு உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது,

11

## வலி.வடக்கு விவசாயத்தில் 'பில்கேட்ஸின்' அறக்கட்டளை

யாழ்ப்பாணம், மார்ச் 23

வலி.வடக்கில் நேற்று விடுவிக்கப்பட்ட காணிகளில் மேற்கொள்ளப்படும் விவசாய நடவடிக்கைகளுக்கு, உலகப் பணக்காரரும் 'மைக்ரோசொப்ட்' நிறுவனத்தின் நிறுவுநருமான பில்கேட்ஸின் அறக்கட்டளை பல்வேறு

11

## சிகிச்சைக்கு மறுத்தவர் சடலமாக நேற்று மீட்பு!

வவுனியா, மார்ச் 23

வவுனியா - தோணிக்கல், ஆலடி வீதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றிலிருந்து ஆணொருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். ரங்கசாமி நேசரத்தினம் (வயது-43) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

11

## சிகிச்சையிலிருந்து ஓடியவர் வீதியில் வீழ்ந்து உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சையை இடைநிறுத்திக் கொண்டு மருத்துவமனையில் இருந்து தப்பி

11

இந்திய மீனவர்கள் அத்துமீறல்

## யாழ்ப்பாண மீனவர்களின் உணவு தவிர்ப்பு வாபஸ்!

யாழ்ப்பாணம், மார்ச் 23

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துமாறும், ஈழ மீனவர்களின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்துமாறும் வலியுறுத்தி, நான்கு மீனவர்கள் முன்னெடுத்த உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்றுக் கைவிடப்பட்டது.

11

## ஈஸ்டர் தாக்குதல்களின் சூத்திரதாரிகளைத் தெரியும்

முன்னாள் ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 23

"உயிர்த்தஞாயிறுத் தாக்குதல்களை நடத்தியோர் யார் என்பது எனக்குத் தெரியும். நீதிமன்றம் உத்தரவிட்டால் அதனை வெளிப்படுத்துவேன். ஆனால் இரகசியம் பாதுகாக்கப்படவேண்டும்" - என்று சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் சம்பவத்தை உண்மையாகவே நடத்தியது யாரென எவரும் இதுவரை கூறவில்லை. இதை யார் செய்தார்கள் என்பது எனக்குத் தெரியும். இது தொடர்பில் வாக்குமூலம் வழங்குமாறு நீதிமன்றம்

11

## துப்பாக்கி ரவையுடன் கைதானார் இளைஞர்

அவரிடமிருந்து ஹெரோய்னும் மீட்பு

வவுனியா, மார்ச் 23

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் துப்பாக்கி ரவைகளை உடைமையில் வைத்திருந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து ஒரு கிராம் 5 மில்லிகிராம் ஹெரோய்னும் மீட்கப்பட்டுள்ளது.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘டிப்பர்களால் தாக்குவோம்’ எச்சரிக்கையால் அச்சம்!

சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடு பவர்களை வெளிப்படுத்தினால் டிப்பர் களால் தாக்குவோம் என எச்சரித்துள்ள சம்பவம் மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

துணுக்காய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அண்மையில் நடை பெற்றது. இதன்போது, கடந்த 14 ஆண்டுகளாக ஐயன்கன்குளம், புத்து வெட்டுவான், பழையமுறிகண்டி ஆகிய கிராமங்களில் நடைபெறுகின்ற மணல் அகழ்வு, களவாக மரங்களை வெட்டி எடுத்துச்செல்லுதல் போன்ற சம்பவங்களை உடனடியாகத் தடுக்கு மாறு இப்பகுதி பொது அமைப்புகளின் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறானதொரு நிலையில் சட்ட விரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்ப டுத்துங்கள் எனக் குரல் எழுப்பியவர் களை டிப்பர்களால் மோதுவோம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-13)

# துணைத்தூதரகம் நேற்று முற்றுகை



யாழ்ப்பாணம், மார்ச் 23

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி இழுவை மடித் தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாணத் தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம் யாழ்ப் பாண மாவட்ட மீனவர்களால் நேற்று முற்றுகை யிடப்பட்டுள்ளது.

துணைத்தூதரகத்துக்குள் அவர்கள் நுழைவதற்கு முயற்சி எடுத்த நிலையில் பொலிஸார் மேலதிகமாக அங்கு களமிறக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவரப்பட்டது. (ஒ-20)

# சபாநாயகர் மீதான பிரேரணை நாடாளுமன்றில் நேரவீணடிப்பு



## அலி சப்ரி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 23

**இலங்கையில் தற்போது தீர்வுகாண வேண்டிய ரூபாவின் பெறுமதி, பணவீக்கம் உள்ளிட்ட பல விடயங்கள் உள்ள நிலையில் சபாநாயகருக்கு எதிராக கடந்த 2 நாள்களாக பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இவை தற்போது நாட்டுக்கு அவசியமா? -இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோது குறிப்பிட்டுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இணையவழி பாதுகாப்புச் சட்டம் தொடர்பில் நீதிமன்றத்தால் பரிந்து ரைகள் முன்வைக்கப்பட்டன. இந்தச் சட்டத்திலுள்ள சில சரத்துகளின் நடைமுறையை மாத்திரம் தடை செய்யுமாறு நீதிமன்றம் வலியுறுத் தியது. ஒரு புதிய சட்டத்தை அறி முகப்படுத்தும் முழுஅதிகாரமும் நாடாளுமன்றத்துக்கு உள்ளது. அதனைச் சான்றுரைக்க மாத்திரமே சபாநாயகருக்கு அதிகாரம் உள் ளது. நாடாளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்ட இணையவழி பாது காப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பான நடவ டிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்றார். (ச-இ)

# மீனவர் போராட்டம் நியாயமானது மாக்சிச லெனினிசக் கட்சி ஆதரவு

யாழ்ப்பாணம், மார்ச் 23

வடபுலத்துக் கடற்பரப்புக்குள் அத்துமீறிப் பிரவேசித்து எமது மீன் வளங்களை அபகரித்து அள்ளிச் செல்லும் இந்திய மீன் முதலாளிகளின் றோலர் இழுவைப் படகுகளின் அடாவடித்தனத்தை எதிர்த்தும், தமது நியாய மான தொழில் வாழ்வாதாரக் கோரிக்கைகளை முன் வைத்தும் யாழ். மாவட்டக் கிராமியக் கடற்றொழில் அமைப்புகளின் சம்மேளனமும், கடற்றொழில் கூட்டு றவுச் சம்மேளனமும் இணைந்து யாழ்ப்பாணம் இந் தியத் துணைத் தூதரகத்துக்கு அருகாமையில் முன் னெடுத்துவரும் உணவு தவிர்ப்புப் போராட்டம் முற் றிலும் நியாயமானதும், அனைத்து மக்களாலும் ஆதரிக்க வேண்டியதுமாகும் எனப் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் தெரிவித்துள்ளார். (ஒ-66)

# பொதுத் தேர்தல்தான் முன்னர் நடக்கவேண்டும்

## பஸில் விடாப்பிடி

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக பொதுத்தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதே பொதுஜன பெரமுனக் கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்களின் யோசனையாக உள்ளது என்று அக்கட்சியின் நிறுவு நரான பஸில் ராஜபக்ச, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், பஸில் ராஜ பக்சவுக்கும் இடையிலான 2ஆம் கட்ட சந்திப்பு நேற்று முன்தினம் இரவு நடைபெற்றபோதே இவ்வாறு கூறியுள்ளார்.

எனினும், தேர்தல் தொடர்பில் பஸில் ராஜபக்சவால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு, ஜனாதிபதி நேரடிப் பதிலை வழங்கவில்லை என்பதுடன், இது தொடர்பில் இணக்கப்பாடும் எட்டப்படவில்லை. (ஒ-44)

# பண்டிகையையொட்டி விலை குறைப்பு

கொழும்பு, மார்ச் 23

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு சில அத்தியாவசிய நுகர்வுப் பொருள்களின் விலை குறைக்கப்பட்டுள்ளது என்று லங்கா சதொச நிறுவனம் அறிவித்துள்ளது.

ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் விலை 100 ரூபா வாலும் சிவப்பு கௌபியின் விலை 52 ரூபாவாலும் வெள்ளை கௌபி 50 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள் ளன.

மேலும் ஒருகிலோ பாஸ்மதி அரிசி விலை 20 ரூபா வாலும், ஒரு கிலோகிராம் சின்னவெங்காயம் 10 ரூபாவாலும் வெள்ளைச் சீனி மற்றும் சிவப்பு சீனி என் பன ஐந்து ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளன என்று லங்கா சதொச நிறுவனம் அறிவித்துள்ளது. (ச-இ)

# இலங்கையின் கறையை நீக்க சர்வதேச விசாரணையே தேவை

## பிரிட்டன் எம்.பி. சுட்டிக்காட்டு

இலங்கை பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதிலும், நிலைமாறுகால நீதியை அடைந்துகொள்வதிலும் அடைந்திருக்கும் தோல்வி, சமாதானம் மற்றும் நல் லிணக்கம் என்பவற்றை இலக்காகக்கொண்ட எதிர் பார்ப்புகளை மழுங்கடித்துள்ளன. செயற்திறன்மிக்க சர்வதேச விசாரணைப்பொறிமுறை மற்றும் தண் டனை அளித்தல் ஊடாகவே இலங்கையில் கறைபடிந்த கறுப்புப் பக்கத்தைப் புரட்டமுடியும் - இவ்வாறு பிரிட்டன் நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை இலங்கை யின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் இடம் பெற்ற விவாதத்தில் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் எலியற் கோல்போர்ன் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)

# பஸில் சொல்வது சரியானதே

## மஹிந்தவும் ஆதரவு

கொழும்பு, மார்ச் 23

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று பொதுஜன பெரமுனக் கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ச வலியுறுத்தி யுள்ளார்.

இது தொடர்பில் பஸில் ராஜபக்ச முன்வைத்துள்ள கோரிக்கை நியாயமானது எனவும் மஹிந்த சுட்டிக்காட்டியுள்ளார். (ஒ-44)

# ஏ-9 வீதியில் தடம்புரண்ட ஒயில் கொள்கலன் ஊர்தி


## போக்குவரத்துக்குப் பாதிப்பு

இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் ஒயில் ஏற்றிவந்த கொள்கலன் ஊர்தி ஏ-9 வீதி கொடி காமத்தில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் [illegible] சுமார் ஒரு மணித்தியாலத்துக்கு மேல் போக்குவரத்து தடைப்பட்டி ருந்தது. இதையடுத்து புகையிரதப் பாதைக்கு அருகாமையில் உள்ள பாதையூடாக போக்குவரத்துகள் இடம்பெற்றிருந்தன.

விபத்துச் சம்பவத்தை அடுத்து கொள்கலனில் இருந்து வெளியே றிய ஒயில் ஏ-9 பிரதான வீதியில் பரவியிருந்தது. இவ்வாறு பரவிய ஒயில் படலத்தின் மீது மணல் பரவப் பட்டு போக்குவரத்து மேற்கொள்வ தற்கு கொடிகாமம் பொலிஸார் நட வடிக்கை எடுத்திருந்தனர். (ஒ-9-100-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி துறக்கும் எண்ணமில்லை



## ரோஹித விடாப்பிடி

கொழும்பு, மார்ச் 23

**'கோப்' குழுவின் தலைமைப் பதவியிலிருந்து விலகப் போவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

பெரும்பான்மை வாக்குகளால் தான் இந்தப் பதவிக்குத் தெரிவாகியுள்ளேன். அதனால் பதவி விலகும் உத்தேசமில்லை. தமது நியமனம் தொடர்பில் எதிர்க்கட்சிகளுக்கு பிரச்சினை இருந்தால் சஜித் பிரேமதாஸவை குழுவின் பிரதிநிதியாக நியமித்து அவருக்கு தலைமைப் பதவியை வழங்கமுடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை- கோப் குழுவின் தலைவராக ரோஹித அபேகுணவர்த்தன நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பை வெளியிட்டு கோப் குழுவில் அங்கம் வகித்த பத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் பதவிவிலகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# புத்தாண்டுக்குள் மிகுதி 5000/=

## ஜனாதிபதி உறுதியளிப்பு

கொழும்பு, மார்ச் 23

இந்த ஆண்டு தமிழ் - சிங்களப் புத்தாண்டுக்குள், அரச ஊழியர்களின் சம்பளம் 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக, கடந்த ஜனவரி மாதம் அரச ஊழியர்களுக்கு 5 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டது. மீதி 5 ஆயிரம் எதிர்வரும் புத்தாண்டுக்குள் வழங்கப்படும்.

சிறந்த பொருளாதார நிலை இருந்தபோது கொடுத்த நிவாரணத்தைவிட, வங்குரோத்தடைந்த நாடாக மக்களுக்கு அளிக்கப்பட்ட நிவாரணம், மூன்று மடங்கு அதிகம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

# விமலின் கூட்டணி புத்தாண்டு உதயம்

கொழும்பு, மார்ச் 23

புதிய கூட்டணியொன்று உருவாக்கும் முயற்சியில் விமல் வீரவன்ஸ செயற்பட்டுவருகின்றார் என்று அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கூட்டணி தமிழ்- சிங்கள புத்தாண்டின் பின் தமது பணிகளை ஆரம்பிக்கவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் இந்தக் கூட்டணி ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை நிறுத்தவும் முடிவுசெய்துள்ளது என்றும் இது குறித்த அறிவிப்புகள் புத்தாண்டின் பின் வெளியாகும் எனவும் தெரியவருகிறது. (ச-இ)

# பயிர் சிகிச்சை முகாம் வவுனியாவில் ஆரம்பம்

வாரத்தின் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் விவசாயிகளுக்கு இலகுவான முறையில் சேவையை வழங்கும் நோக்கில், வவுனியா ஹொரவப்பொத்தானை வீதியில் அமைந்துள்ள மொத்த மரக்கறி வியாபார சந்தைக்கு முன்பாக, பயிர் சிகிச்சை முகாம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டில், பிரதி விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. (ப-110)

# பொலிஸ் அதிகாரிகள் விரைவில் இடமாற்றம்

கொழும்பு, மார்ச் 23

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் 80 பேருக்கு விரைவில் இடமாற்றம் வழங்க பொலிஸ் தலைமையகம் தீர்மானித்துள்ளது. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன் பொலிஸ்மா அதிபர் இந்த இடமாற்றங்களை மேற்கொள்ளவுள்ளார்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் நியமன நேர்முகத் தேர்வின் புள்ளிகள் மற்றும் திறமைகளின் அடிப்படையில் இடமாற்றம் இடம்பெறவுள்ளது. அத்துடன் மூன்றாண்டுகளுக்கு மேல் ஒரே பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொறுப்பதிகாரிகள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# சட்டவிரோத கிரீம்கள் விற்பனை அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 23

புற்றுநோயை உண்டாக்கும் கிறீம்கள் உள்ளிட்ட அழகுசாதனப் பொருள்களின் விநியோகங்கள் தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றன என்று நுகர்வோர் விவகார அதிகாரசபையின் பொது ஊழியர் சங்கத்தின் செயலாளர் அஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; உலக சுகாதார ஸ்தாபனத்தால் தடைசெய்யப்பட்ட கிறீம்கள் உள்ளிட்ட அழகுசாதனப் பொருள்கள் சந்தையில் சூட்சுமமாக விற்பனை செய்யப்படுகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பெண்களின் சருமத்தை விரைவாக வெண்மையாக்கும் எனக் கூறி குறித்த கிறீம்கள் விற்பனை செய்யப்படுகின்றன. அதில் ஈயம், பாதரசத்தின் அளவு மற்றும் கொண்டிசு எனும் மூலப்பொருள் என்பன அதிகளவு சேர்க்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இந்தக் கிறீம்களால் புற்றுநோய் உருவாகும் என்பதில் சந்தேகமே இல்லை. இது தொடர்பில் அவதானம் அவசியம் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (ச-இ)

# புதினம் தெரியுமோ?



பட்சி சொன்ன சில விசயங்களுக்கு வந்த எதிர்வினையள் பற்றி இண்டைக்குப் பார்க்கவேண்டியிருக்கு.

பள்ளிக்கூட விளையாட்டுப் போட்டியளில் ஆரை விருந்தினராக் கூப்பிடுகினம், விநோத உடைக்கு என்னென்ன வேசம் போடுகினம் எண்டெல்லாம் தங்களிட்ட பெர்மிசன் எடுக்கோணும் எண்டு வடக்கின்ர கல்விக்குப் பொறுப்பானவை வாய்மொழி உத்தரவு போட்டதை பட்சி சொன்னதெல்லோ. அதை வாசிச்சிப் போட்டு கல்வித்திணைக்களத் தரப்புகள் தங்கட பக்க நியாயத்தை சொன்னவை.

கூட்டம் நடந்தது உண்மைதான். ஆனால் தமிழீழம் மாதிரி உருவங்களில இல்லங்களைச் சோடிச்சாலோ, சிவபெருமானைப் பிக்கு பிடிச்சு இழுத்துக்கொண்டு வாறமாதிரி விநோத உடைப்போட்டியில வேசம் போட்டாலோ அது இனநல்லிணக்கத்தைக் குழப்புது எண்டு ஆரும் வரக்கூடும். அப்பிடிப் பிரச்சினை வந்தால் அது பள்ளிக்கூடத்துக்குத்தான் பாதிப்பு. அதால்தான் அதுகளை இயன்றளவு தவிர்க்கச் சொன்னனாங்கள். மற்றும்படி எங்களிட்ட பெர்மிசன் எடுத்துத்தான் உதுகளைச் செய்யோணும் எண்டு ஓர்டர் போடேலை. பட்சியில சொன்னமாதிரி அதில அதிபர்மார் கலந்துகொள்ளேலை. வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்குத்தான் அந்தக் கூட்டத்தை வைச்சனாங்கள். ரூரிஸ்ட் விசாவில வெளி நாட்டில இருந்து வந்தவைய விருந்தினராகக் கூப்பிடேக்க, தமிழீழம் மாதிரி வடிவமைப்புகளைச் செய்தால் அது அவைக்கும் சிக்கலாப்போடும். அதால அவையை விருந்தினராக் கூப்பிடேக்க பார்த்துச் செய்யுங்கோ எண்டுதான் அட்வைஸ் சொன்னம்.

இதுதான் அவை சொன்ன விளக்கத்தின்ர சுருக்கம். சரி, இப்படி ஒரு நல்ல நோக்கத்தோட அப்பிடி ஓர்டர் போட்டிருந்தால் அதை வரவேற்கத்தான் வேணும். ஆனால் நல்லதைச் சொல்லுறம் எண்ட பாவனையில, எங்கட தேசியச் சிந்தனையளைக் குழப்பிற வேலையளைக் காட்டினால் அது கொஞ்ச நாளில வெளிச்சத்துக்கு வந்திடும்.

+++ +++ +++


கொஞ்ச நாளைக்கு முதல் பட்சிக்கு ஒரு கோல்.

மானிப்பாய் பனைதென்னை வளச் சங்கத் தலைவர் கதைக்கிறன் எண்டு சொல்ல, சொல்லுங்கோ எண்டு கேக்கத் தொடங்கினம்.

பட்சியில மானிப்பாய் பனை தென்னைவளச் சங்கத் தவறணையில ஸ்ரிக்கர் எடுத்த செய்தி வந்ததெல்லோ. அதை எப்பிடி எங்களைக் கேக்காமல் போடமுடியும்? எண்டு ஆள் ஒற்றைப்பிடியா நிண்டார். உங்கட சங்கத்தை குறை சொல்லியோ, குற்றம் சாட்டியோ, பிழையாவோ ஒரு சொல்லுக்கூட இல்லையே. கலால் திணைக்களக்காரர் தான் இந்தச் சிக்கலுக்கு காரணம் எண்டமாதிரித்தானே போட்டிருக்கு என்று பட்சி சொல்லிமுடிக்க,

அது தெரியாது. ஆனால் எங்கட சங்கத்தின்ர பேரைப் போடுறதெண்டால் என்னைக் கேக்கவேணும். என்ர அனுமதி பெறவேணும். இஞ்ச எத்தினை பேர் எவ்வளவு கள்ளவேலை செய்யிறாங்கள். அவங்களைப் பிடிக்கக் காணேலை. இதை ஏன் போட்டனியள்? வந்தன் எண்டா எல்லாரையும் வெட்டுவன் எண்டு சுடுதண்ணி குடிச்ச நாய் மாதிரி ஆள் கண்டபடி குரைக்கத் தொடங்கிட்டார். பாவம் அவர் கதைச்சதெல்லாம் ரெக்கோர்ட் பண்ணிக்கொண்டிருக்கிற விசயத்தைச் சொன்னதும் பயத்தில பட்டெண்டு ஆள் போனை வைச்சிட்டுது.

இப்பிடி பயமுள்ளவர் என்னத்துக்கு இப்பிடி போத்திலுக்க விட்ட பழங்கள்ளு மாதிரி பொங்கவேணும்? அதைவிட கலால்காரரிலதான் பிழையெண்டு பட்சி சொல்லி நாலைஞ்சு நாளைக்குப் பிறகு அதைப்பற்றி குற்றமே சாட்டுப்படாத மானிப்பாய் பனைதென்னைவளச் சங்கத் தலைவர் ஏன் விலை குடுத்து வில்லங்கத்தை வாங்கிறன் எண்டு நிக்கிறார் எண்டு விளங்கேலை. ஒருவேளை ஸ்ரிக்கர் மோசடியில கலால் காரரோட இவருக்கும் ஏதும் தொடர்பிருக்குமோ? குற்றமில்லாட்டி நெஞ்சு குறுகுறுக்காதே.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரர் இன்று தேர்ப்பவனியில்

சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்



உலகெலாம் நிறைந்து விளங்கும் பரம்பொருளான சிவபெருமான் வண்ணையம்பதியிலே வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரனாக எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக்கும் அற்புத தலம் தான் யாழ். வண்ணை சிவன் கோயிலாகும்.
சரித்திரப் பிரசித்திவாய்ந்த இந்தக்கோயிலின் வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா இன்றாகும். இன்று அஞ்சேல் என அபயமளிக்கும் பரம்பொருளாக சோமாஸ்கந்த மூர்த்தத்தில் பஞ்சரதத்தில் வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரர் பவனிவருகிறார்.
அழகெல்லாம் சேர்ந்து உரு எடுத்தாற் போன்ற எல்லாம்வல்ல சிவபெருமான், அடியார்களின் துன்ப, துயரங்களைப் போக்கும் விதமாக சோமாஸ்கந்தராக ஸ்ரீ வாலாம்பிகையுடன் வீதி வலம் வரும் காட்சி பக்திபூர்வமானது.
வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனாக ஸ்ரீ வைத்தீஸ்வரர் இன்றைய நல்ல நாளிலே தேரேறி வந்து அடியார்களுக்கு அருட்காட்சித் தருகிறார்.
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பிரசங்கம் செய்த பெருமையுள்ள இந்த ஆலய உற்சவ காலத்தில் ஒவ்வொருவிதமான அலங்காரத்தில் வண்ணை வைத்தீஸ்வரர் வீதி வலம் வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். வைத்தீஸ்வரரை வணங்கி வழிபாடாற்ற வந்திருக்கும் அடியார் பெருமக்களுக்கு தாக சாந்தி, மதியம் அன்னதானம் என்பன சிறப்பாக நடைபெறும்.
வீதியெங்கும் தோரணம்கட்டி நிறைகுடம் வைத்துக் குத்துவிளக்கேற்றி எம்பெருமானை ரதமேறி வந்து காட்சி தர வைக்கும் பாங்கு அற்புதமான புண்ணியம் நிறைந்த கோலாகலக் காட்சியாகும். பங்குனி உத்தர நன்னாளான நாளை ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவம் நிகழ்ந்து அடுத்தநாள் திருக்கல்யாண வைபோகம் வெகு சிறப்பாக நடைபெறும்.
பஞ்சரத பவனி காண வாரீர்!
வைத்தீஸ்வரர் அருள்பெற ஓடோடி வாரீர்!

## மொட்டு ஜனாதிபதி வேட்பாளர் அடுத்த வாரம் அறிவிப்பாம்

கொழும்பு, மார்ச் 23
பொதுஜன பெரமுனக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அடுத்தவாரம் பெயரிடப்படுவார் என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.
ரணில் விக்கிரமசிங்க, பஸில் ராஜபக்ச, நாமல் ராஜபக்ச, தம்பிக்க பெரேரா ஆகிய நால்வரில் ஒருவரே அந்த வேட்பாளராக இருப்பார் எனவும் அவர் கூறினார். (ஒ-44)

## கீரிச்சம்பாவுடன் லொறி திருட்டு

கொழும்பு, மார்ச் 23
லொறியொன்றைக் கடத்திச் சென்ற நபர்கள், அதிலிருந்த சுமார் 15 இலட்சம் ரூபா பெறுமதியான 9,100 கிலோ கீரிச்சம்பா அரிசியைத் திருடி விட்டு லொறியை மாத்திரம் விட்டுச் சென்றுள்ளனர்.
இந்தச் சம்பவம் வெலிகந்த பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. சிங்கபுர பகுதியிலுள்ள அரிசி ஆலைக்கு லொறியில் அரிசியைக் கொண்டு செல்லும்போது வாகன நெரிசல் காரணமாக சாரதி ஓரிடத்தில் லொறியை நிறுத்திவிட்டுச் சென்று விட்டு மறுநாள் காலை வந்து பார்த்த போது லொறியைக் காணவில்லை.
இதுதொடர்பில் உரிமையாளரால் வெலிகந்த பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.
முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

## யானைகளின் அட்டகாசத்தால் மக்களின் வாழ்வாதாரம் பாதிப்பு

கிளிநொச்சி, மார்ச் 23
கண்டாவளைப் பகுதியில், காட்டு யானைகளின் அட்டகாசத்தால் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படுகின்றன என அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.
கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வெளிக்கண்டல் பகுதியிலுள்ள மக்கள் குடியிருப்புக்குள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை 3 காட்டு யானைகள் புகுந்து, வாழ்வாதாரத்துக்காக வைக்கப்பட்டிருந்த 7 தென்னைமரங்களையும், பயன்தரக்கூடிய நிலையிலிருந்த 40 க்கும் மேற்பட்ட வாழைகளையும் முற்றுமுழுதாக அழித்துத் துவம்சம் செய்துள்ளன. எனவே வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான இழப்பீட்டையும், மக்களுக்கு யானை வெடிகளையும் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (ப-113)



## கெஹலியவின் பிணைமனு ஒத்திவைப்பு

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சரான கெஹலிய ரம்புக்வெலவை பிணையில் விடுவிப்பதற்கான உத்தரவைப் பிறப்பிக்குமாறு தாக்கல் செய்யப்பட்ட மனுவை எதிர்வரும் 25ஆம் திகதி கூடி ஆராய கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
குறித்த மனு நேற்றுமுன்தினம் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுஜீவ நிஷங்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது இந்த மனு தொடர்பான ஆவணங்கள் தமக்குக் கிடைக்கவில்லை. உரிய ஆவணங்களை சட்டமா அதிபரிடம் ஒப்படைக்குமாறு மனுதாரருக்கு அறிவித்த நீதிபதி, மனுவை எதிர்வரும் திங்கட்கிழமை பரிசீலனைக்கு அழைக்குமாறு உத்தரவிட்டார். (ச-இ)

## பண்டிகைக் காலத்தில் விசேட போக்குவரத்து

கொழும்பு, மார்ச் 23
தமிழ் - சிங்களப் புத்தாண்டு, ரமழான் பண்டிகையை முன்னிட்டு எதிர்வரும் ஏப்ரல் 5 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை விசேட பொதுப் போக்குவரத்துத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.
இலங்கைப் போக்குவரத்துச்சபை, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, புகையிரதத் திணைக்களம் மற்றும் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை ஆகியவற்றுக்கு போக்குவரத்து அமைச்சின் செயலாளர் இது குறித்து எழுத்துமூலம் அறிவித்துள்ளார். (ச-இ)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மகிழ்ச்சி தரும் நாள். மனவருத்தம் நீங்கி சுமுகமான உறவு ஏற்படும். வீண் செலவுகள் ஏற்படும். உறவினர்களால் ஏற்பட்ட குழப்பங்கள் நீங்கும். விற்பனையும் இலாபமும் வழக்கம்போல் இருக்கும். இன்று தட்சணாமூர்த்தி வழிபாடு நன்று.

**இடபம்:** அனுகூலமான நாள். சங்கடங்கள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். எதிர்பார்த்த காரியம் இழுபறியாகி முடியும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடமுடியும். உறவுகளால் சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**மிதுனம்:** உற்சாகமான நாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். வியாபாரத்தில் இலாபம் கூடுதலாகக் கிடைக்கும். நலம் சேர்க்கும். வியாபாரத்தில் இலாபம் எதிர்பார்த்ததைப் போலவே இருப்பது மகிழ்ச்சி தரும்.

**கடகம்:** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உறவினர்களால் குடும்பத்தில் தேவையற்ற குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வியாபாரத்தில் வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வியாபாரத்தில் விற்பனை அதிகரிக்கும். கூடுதல் உழைப்பு தேவைப்படும்.

**கன்னி:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். பணப்புழக்கம் அதிகரிக்கும். எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். ஆதாயம் கிடைக்கும்.

**துலாம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். முக்கியமான முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். பணம் கேட்டு நச்சரிப்பார்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியம் அனுகூலமாகும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிட முடியும்.

**விருச்சிகம்:** மகிழ்ச்சி தரும் நாள். பிணக்குகள் நீங்கி சுமுக உறவு ஏற்படும். முயற்சிகளுக்குத் தேவையான ஆதரவு கிடைக்கும். பிரச்சினை உண்டாகும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**தனுசு:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும். சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். காரியம் இழுபறியாகும். புதிய முயற்சிகள் மேற்கொள்வதைத் தவிர்க்கவும். துர்க்கை அம்மனை வழிபடுவது நன்று.

**மகரம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். கவனம் செலுத்தவும். குடும்பப் பொறுப்புகளின் அலைச்சல் ஏற்படக்கூடும். சில சங்கடங்கள் ஏற்படும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. எதிரிகளால் இடையூறுகள் நீங்கும்.

**கும்பம்:** மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். மனக்கசப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. சில பிரச்னைகள் ஏற்படும். பாதிப்பு எதுவும் இருக்காது. வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்படும் என்பதால் மகிழ்ச்சியே ஏற்படும்.

**மீனம்:** எதிலும் பொறுமை அவசியம். புதிய முயற்சிகள் இழுபறியாகும். அடிக்கடி மனதில் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். சற்று சோர்வு உண்டாகும். விட்டுக்கொடுத்துச் செல்லவும். வியாபாரம் வழக்கம்போல் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அவர்கள் திருந்தப்போவதில்லை

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விவகாரத்தில் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய பொலிஸாரின் செயற்பாடுகள் தொடர்பில் பல தடவைகள் ஆசிரியர் தலையங்கத்தில் 'உதயன்' சுட்டிக்காட்டியிருந்தான். கடந்த காலங்களில் இந்தத் தீவில் ஓடிய குருதி ஆறுக்கும் பொலிஸாரின் இத்தகைய பக்கச்சார்பான செயற்பாடுகளும் வழிகோலியிருந்தன. அவர்கள் அதிலிருந்து இப்போதும் விலகவில்லை. சிங்கள –பௌத்த பேரினவாத சிந்தனையை நடைமுறைப்படுத்தும் திணைக்களமாகவே பொலிஸார் இருக்கின்றனர். இங்கே அவர்கள் மாத்திரமல்ல அந்தத் திணைக்களத்துக்குப் பொறுப்பாக இருக்கின்ற அமைச்சர் கூட அதே சிந்தனையில் ஊறித்திளைத்தவராகத்தான் இருக்கின்றார்.

இந்துக் கோயில்கள் எவையும் இல்லை. அது அநுராதபுரத்துக்கால பௌத்த மரபுரிமைக்குரிய இடம். அங்கு 2023 ஆம் ஆண்டு வைக்கப்பட்ட சிவலிங்கத்தாலேதான் பிரச்சினை. பௌத்த மரபுரிமைக்குரிய இடத்துக்குள் பிரவேசித்தால் கைதுசெய்யப்படுவார்கள் என்று நாடாளுமன்றத்தில் வைத்து முழங்கியிருக்கின்றார் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ். இவற்றுக்கு ஒரு படி மேலே சென்ற சரத் வீரசேகர, அங்கிருந்த பௌத்த சின்னங்கள் ஆயிரத்து 500 ஆண்டுகள் பழமையானவை. அவற்றை இடித்தழித்துவிட்டே அங்கு சிவலிங்கம் வைக்கப்பட்டுள்ளது என்று சொல்லியிருக்கின்றார்.

1997 ஆம் ஆண்டு 'ஜெயசிக்குறு' சமர் காரணமாக வெடுக்குநாறிமலையைச் சூழவுள்ள கிராமமக்கள் இடம்பெயர்ந்திருக்கின்றனர். 2002ஆம் ஆண்டு மீளக்குடியமர்ந்ததிலிருந்து வழிபட்டிருக்கின்றனர். 2006 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட குழப்பநிலையைத் தொடர்ந்து அங்கு சென்று வழிபட முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்தாலும், வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரருக்குச் செல்லும் பாதையில் இராணுவமுகாம் இருந்தமையால் மக்கள் செல்ல முடியவில்லை. நல்லாட்சிக் காலத்தில் அது அகற்றப்பட்ட பின்னர் மக்கள் அங்கு சென்று மீண்டும் வழிபடத் தொடங்கினர். 2018 ஆம் ஆண்டு அங்கு மலைக்குச் செல்வதற்கான ஏணி அமைக்கப்பட்டபோதே தொல்பொருள் திணைக்களம் தலையிட்டு பிரச்சினைகளை ஆரம்பித்து வைத்தது. கடந்த ஆண்டு ஆதிலிங்கேஸ்வரர் ஆலயச் சிலைகள் எல்லாம் அடித்துடைக்கப்பட்டிருந்தன. இதுவரையில் அவற்றைச் செய்தவர்கள் யார் என்பது கண்டறியப்படவுமில்லை, கைதுசெய்யப்படவுமில்லை. தொல்பொருள் இடம் என்று தொல்பொருள் திணைக்களம் கூறும் ஒரு பிரதேசத்தில் வழிபாட்டிடங்களை அழித்தவர்களைக் கைது செய்யாத பொலிஸ் திணைக்களமும் அதற்குப் பொறுப்பான அமைச்சரும்தான், இடித்தழிக்கப்பட்ட சிவலிங்கத்தை மீள வைத்ததிலிருந்து பிரச்சினை ஆரம்பமானது என்று கூறுகின்றனர்.

அமைச்சர் டிரான் அலஸ் சொல்லவரும் செய்தி தெளிவானது. "பௌத்த - சிங்கள மரபுரிமைக்கு ஆபத்து ஏற்பட்டால் மாத்திரமே நாம் நடவடிக்கை எடுப்போம். ஏனைய மதத்தவரின் தொன்மைக்குச் சேதம் ஏற்படுத்தினால் அது தொடர்பில் கவலைப்படமாட்டோம். அதைவிட ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்திலிருந்த விக்கிரகங்கள் உடைக்கப்பட்டது சரியானதே" என்பதைப் போலவே அமைச்சர் டிரானின் கருத்து அமைந்திருக்கின்றது. அதை மீள வைத்ததில்தான் தவறு என்கிறார். இவற்றுக்கு மேலாக, பௌத்த மரபுரிமை இடங்களுக்குள் அத்துமீறி நுழைந்தால் கைதாகுவீர்கள் என்று எச்சரிக்கையும் விடுத்திருக்கின்றார்.எனவே வெடுக்குநாறிமலையில் கைதானவர்கள் விடுவிக்கப்பட்டதுடன் இந்த விவகாரம் முடிந்துவிடப்போவதில்லை. அங்கு வழிபாட்டுக்குச் சென்றால் மீண்டும் கைதுசெய்வோம் என்ற எச்சரிக்கையை அவர் சொல்லாமல் சொல்லியிருக்கின்றார். நீதிமன்றங்கள் வழங்கும் கட்டளைகளைக்கூட மதிக்காத வகையில் உரையாற்றியிருக்கின்றார் அமைச்சர் டிரான். இந்த லட்சணத்தில்தான் ஜனாதிபதி ரணில், வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி அன்று நடந்த விடயம் தொடர்பான தனியான விசாரணைக் குழு அமைக்க இணங்கியிருக்கின்றார் என்று அமைச்சர் டக்ளஸ் பெருமையாக அறிக்கையிட்டிருந்தார். பௌத்த - சிங்கள பேரினவாதம் என்ற சிந்தனையோட்டத்திலிருந்து வெளியே வராத வரையில் எதுவும் நடக்கப்போவதில்லை.




# அரசின் மீதான அங்கீகாரம் மக்களிடையே சரிவுநிலை!

## வெரிட்டே ரிசேர்ச் கருத்துக்கணிப்பு

**கொழும்பு, மார்ச் 23**

**2023 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் 9 வீதமாக இருந்த அரசாங்கம் மீதான மக்களின் அங்கீகாரம் 2024 பெப்ரவரியில் 7 வீதமாக சரிவடைந்துள்ளது.**

வெரிட்டே ரிசேர்ச்சின் சமீபத்திய 'தேசத்தின் மனநிலை' கருத்துக்கணிப்பின்படி, இந்த விடயம் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், "தற்போதைய அரசாங்கம்செயற்படும்முறையை நீங்கள் அங்கீகரிக்கிறீர்களா அல்லது மறுக்கிறீர்களா?" என்ற கேள்விக்கு, பதிலளித்தவர்களில் 7 வீதமானோர் ஏற்றுக்கொள்வதாக கூறியுள்ளனர். 85 வீதமானோர் மறுத்துள்ளனர். அரசாங்கம் மீதான அங்கீகார மதிப்பீடு 2022 ஜூன் மாதத்துக்குப் பிறகு தற்போது மிகக் குறைந்த புள்ளியை எட்டியுள்ளது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகளை 'சிறப்பு, நன்று அல்லது மோசம்' எனக் கணிக்கப்பட்டபோது மோசமாக உள்ளதென 91வீதமானோர் கூறியுள்ளனர். (ச-இ)

# கோத்தாவே பொறுப்பு

கொழும்பு, மார்ச் 23

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச எடுத்த அனைத்துத் தீர்மானங்களுக்கும் அவரே பொறுப்புக்கூற வேண்டுமென்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தலைவர் ஒருவர் எடுக்கும் எந்தவொரு தீர்மானத்துக்கும் அந்தத் தலைவரே இறுதிப் பொறுப்பை ஏற்கவேண்டும். ஒரு தலைவர் முடிவுகளை எடுக்க முன் மற்றவர்களுடன் கலந்தாலோசிக்கலாம். ஒரு முடிவு எடுக்கப்பட்டுவிட்டால் அவர்தான் அதற்கான பொறுப்பை ஏற்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ச-இ)



# கோப் குழுவிலிருந்து டிலானும் விலகல்

பொதுஜன பெரமுனவின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தற்போது சுதந்திர மக்கள் சபையுடன் இணைந்து செயற்படுபவருமான டிலான் பெரேராவும் கோப் குழுவில் இருந்து விலகியுள்ளார்.

குழுவின் தலைமைப்பதவிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே அவர் இவ்வாறு விலகியுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், நளின் பண்டார, அநுரபிரியதர்ஷன யாப்பா தவிர ஏனைய அனைத்து எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்களும் பதவிவிலகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-44)

# 'ஷெல்' எரிபொருள் விற்பனை ஆரம்பம்

இலங்கையின் எரிபொருள் சந்தையில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள 'ஷெல்' நிறுவனத்துக்குச் சொந்தமான எரிபொருள் விற்பனை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த நிறுவனத்துக்குச் சொந்தமான முதலாவது எரிபொருள் கப்பல் நேற்றுமுன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. (ச-இ)

# தகவல் அளித்தால் பணப்பரிசுகள்

நாட்டில் திட்டமிட்ட குற்றச் செயல்கள் மற்றும் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடுவோர் குறித்த தகவல்களை வழங்குவோருக்கு சன்மானம் வழங்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார். (ச-இ)

## நாளை

24.03.2024

**ஞாயிற்றுக்கிழமை**

**பங்குனி–11**

சுபநேரம் : 09.15 – 10.45

ராகுகாலம் : 04.45 – 06.15


## நாளொரு நல்வார்த்தை

**தோல்வியை ஒப்புக்கொள்ள தயங்காதே. தோல்வியிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டியவை நிறைய இருக்கின்றன.**

**– லெனின்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
26 . 09 . 1958

மறைவு
22 . 02 . 2024

## கந்தையா ஸ்ரீஸ்கந்தகனகராசா (கிளி)

தல்வளையார் - ஐங்கரனே
தலைமை என்று
தரணியிலே வாழ்ந்தவரே
பாசமெனும் விழிவைத்து
குடும்பமதை தன்னுயிராய்
கண்ணியமாய் காத்தவரே

ஊரோடும் நல் உறவாய்
கிளி என்று பெயர் எடுத்து
கிளி போல வலம் வந்தவரே

எங்குதான் சென்றீரோ
எங்கும் செல்லவில்லை
நினைவும் நிழலுமாய்
என்றும் எம்முடனே வாழ்வீரே!

மருமகன்
மா.தயாளன் (பிரான்ஸ்).

(CS/28317) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் 'அவளுடைய பலம் நாட்டுக்கு முன்னேற்றம்' எனும் தொனிப்பொருளிலான மகளிர்தின நிகழ்வு, சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (ப-66)

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவர் தி.சுந்தரலிங்கத்தின் 40 வருட கூட்டுறவுச்சேவையைப் பாராட்டி முன்னெடுக்கப்பட்ட சேவை நயப்பு விழா சங்க மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திரசேகரன், ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் மற்றும் கூட்டுறவாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-17)



உலக பூச்சிய கழிவு தினத்தை முன்னிட்டு, காரைநகர்ப் பிரதேசசபையின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட கடற்கரையோரச் சுத்தப்படுத்தல் செயற்றிட்டத்தின் ஆரம்ப நிகழ்வு காரைநகர் கசூரினாக் கடற்கரையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் கசூரினாக் கடற்கரை தொடக்கம் தீர்த்தக்கரை வரையான பகுதிகளில் பிளாஸ்ரிக் முதலான பெருமளவு கழிவுகள் சேகரிக்கப்பட்டு திண்மக்கழிவு தரம் பிரிக்கும் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டன. (ப-66)





சர்வதேச நீர் தினத்தை முன்னிட்டு, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் குருதிக்கொடை முகாம் ஒன்று கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. (ப-214)




யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபை கல்லூரியில் கூட்டுறவு உயர்தரப் பரீட்சையை முடித்து வெளியேறிய மாணவர்களுக்கான பிரியாவிடை மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திரசேகரன், கூட்டுறவுச் சபைத் தலைவர் மகாதேவன் மற்றும் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதிஸ்குமரன் எனப்பலர் கலந்துகொண்டனர். (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவதீட்சை வழங்கல்

மட்டக்களப்பு, மார்ச் 23

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப் பட்ட சிவதீட்சை வழங்கும் நிகழ்வு, மட்டக்களப்பு கொக்கட் டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கி ழமை காலை 8 மணிக்கு இடம் பெறவுள்ளது. ஆலயத் தலைவர் இ.மேகராசா தலைமையில் நடை பெறவுள்ள நிகழ்வில் சிவஸ்ரீ மு.கு.சச்சிதானந்தமூர்த்தி குருக் கள் தீட்சையை வழங்கவுள்ளார்.

(ப-159)

## மணமகன் தேவை

**1990 ம் ஆண்டு பிறந்த யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச உத்தியோகம் பார்க்கும், திருவோண நட்சத்திரம் (கிரகபாவம் 22 1/2) மணமகளுக்கு மணமகன் தேவை.**

(CS/28311) J-1

தொடர்பு:- 077 956 3654

## தவறிவிட்டது

TCT Food City க்கு அருகாமையில் இருந்து KKS வீதியில் அமைந்துள்ள கிருஷ்ணா அடகுகடைக்கு இடையில் வாகன சாரதி அனுமதிப்பத்திரம், தேசிய அடையாள அட்டை, வங்கி ATM அட்டை போன்ற ஆவணங்கள் அடங்கிய அடையாள அட்டை கவர் ஒன்று தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் இந்த தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

077 020 4656

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலை ஆசிரியர்

**திரு. ஞானமுத்து எசார்வே**

அவர்கள் 16.03.2024 சனிக்கிழமையன்று யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற 38வது பொதுப் பட்டமளிப்பு விழாவின் போது கிறிஸ்தவக் கற்கைநெறியில் முதுமாணிப் பட்டம் (MA) பெற்றமையினையிட்டு அவரை எமது பாடசாலைச் சமூகம் சார்பாகப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.




வாழ்த்துவோர்:

**பாடசாலைச் சமூகம்,
யா/ ஆனைக்கோட்டை
பாலசுப்பிரமணிய வித்தியாலயம்.**

(CS/54484) J-1

## காணி விற்பனைக்கு

**பருத்தித்துறை வீதியில் புத்தூர்ச் சந்தியிலிருந்து - மட்டுவில், சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து 100m இல் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு.**

**2 பரப்பு - 4 1/2 லட்சம்.**

**தரகர் தேவையில்லை**

பார்வையிடும் நேரம்:
8.30 AM - 6.00 PM

தொடர்புகளுக்கு: 076 659 0583
074 260 0617
076 109 8504

(CS 28227) A-1

16.03.2024 சனிக்கிழமை 11ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்துடன் கீழ்க்காண் நிபந்தனைகளையும் கவனத்தில் கொண்டு விண்ணப்பிக்குமாறு அறியத்தரப்பட்டுள்ளது.

## தென்மராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து) - கொடிகாமம் நிபந்தனைகள்

1. வயதெல்லை 18 - 45 இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.
2. கூட்டுறவுச் சங்கங்களில் கடமை புரிபவர்கள் குறித்த சங்கத்தினூடாக விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.
3. விண்ணப்பத்துடன் கல்வித் தகைமைச் சான்றிதழ், மேலதிக கல்வித் தகைமைச் சான்றிதழ், மேலதிக துறைசார் சேவைச் சான்றிதழ், சமூக நலன் செயற்பாடுகளுடனான சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றின் நிழற்பிரதி இணைக்கப்படல் வேண்டும்.
4. மேற்படி பதவிகளுக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி சங்க சட்டதிட்டங்களுக்கமைய உரிய பிணையினை செலுத்துதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் இறுதித் திகதி 30.03.2024 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி திகதியானது 05.04.2024 வரை கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.**

(CR 41960) S-1

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
28 • 11 • 1936



விண்ணில்
23 • 03 • 2021

**சிவபாக்கியன் நல்லம்மா**

எங்கள் ஆருயிர் அம்மா
ஆலமரம்போல ஆயிரம் உறவுகள் இருந்தும்
ஆறுதல் கூற யாரும் இல்லை அம்மா
வேறென நீங்கள் இருந்தீர்கள்
விழுதுகள் இங்கே அழுகின்றோம் அம்மா
நீங்கள் அமைதியாய் ஆண்டவன் அடியில்
உறங்குங்கள் அம்மா..


**200, சென்பெனடிக் வீதி,
யாழ்ப்பாணம்.**

(CS/28329) J-1

**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

## மார்க்கண்டு மனோன்மணி



காரைநகரை பிறப்பிடமாகவும் சித்தன்கேணி, நல்லூர் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மார்க்கண்டு மனோன்மணி அவர்கள் நேற்று முன்தினம் (21.03.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரன் - வள்ளியம்மை தம்பதியினரின் ஏக புத்திரியும், மட்டுவிலைச் சேர்ந்த ஒப்பர் தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற மார்க்கண்டுவின் (சித்திரக் கலைஞர்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான அம்பலம் (ஓய்வு பெற்ற பொறியியலாளர் - கொடிகாமம்), குமரவேலு (ஓய்வு பெற்ற தபாலதிபர் - சித்தன்கேணி), பழனிமலை (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான முருகேசு, பாலேந்திரா சரஸ்வதி, நாராயணன் வரதலட்சுமி (ஆசிரியை), மற்றும் நாராயணன் குகநேசன் (ஓய்வு நிலை தபாலதிபர் - விவாகப்பதிவாளர் நல்லூர்) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும், திருமதி சோமாவதி அம்பலம் (ஓய்வுநிலை ஆசிரியை - கொடிகாமம்), திருமதி சற்குணதேவி குமாரவேலு (ஓய்வு நிலை ஆசிரியை - சித்தன்கேணி), திருமதி லக்ஷி பழனிமலை (அவுஸ்திரேலியா), திருமதி சௌந்தரராணி குகநேசன் (ஓய்வுநிலை ஆசிரியை - நல்லூர்), காலஞ்சென்றவர்களான நாகேசு, சீதை, கனகம்மா, நாகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், கிருஸ்ணகோபி (பரீட்சைத் திணைக்களம் - கொழும்பு), டிலானி அம்பலம் (முகாமைத்துவம் கொழும்பு கச்சேரி), வைத்தியக்கலாநிதி லவண்யா பழனிமலை (அவுஸ்திரேலியா), குகநேசன் அபிராம் (மாணவன் யாழ் இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.03.2024) ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**சிதம்பரன் பழனிமலை (அவுஸ்திரேலியா)
நாராயணன் குகநேசன்
ஓய்வு பெற்ற தபாலதிபரும்
விவாகப் பதிவாளரும் நல்லூர்.**
077 665 1882

**இல 225/1
மூத்த விநாயகர் வீதி,
நல்லூர் கிழக்கு,
யாழ்ப்பாணம்.**

(CS/54473) J-1

**தோற்றம்
24.11.1951**

**மறைவு
21.03.2024**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கென


# ஐ.தே.க.வின் அமைப்பாளராக எவரும் நியமிக்கப்படவில்லை

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் எவரும் இதுவரை தெரிவுசெய்யப்படவில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுமுன்தினம் பயணம் மேற்கொண்ட ஐ.தே.கவின் பிரதித் தலைவரும்முன்னாள் நிதி அமைச்சருமான ரவி கருணாநாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட அமைப்பாளராக அருண் சித்தார்த் நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவித்திருந்தார். இது தொடர்பில் கட்சியின் பிரதிநிதிகள் ஜனாதிபதி ரணிலிடம் நேற்று வினவியபோதே, யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் எவரும் இதுவரை தெரிவு செய்யப்படவில்லை என்று ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (ம-100)



பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தொகுதியைத் திறந்துவைப்பதற்காக ஜனாதிபதி ரணில் வந்த போது, சர்வமதத் தலைவர்கள் எழுந்து நிற்காமல் அவரைப் புறக்கணித்தனர். (ம-100)

# ஜனாதிபதி பங்கேற்ற நிகழ்ச்சியில் ஊடகவியலாளர்களுக்கு கெடுபிடி!

யாழ்ப்பாணம், மார்ச் 23

வடமராட்சி பருத்தித்துறையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுப் பங்கேற்ற நிகழ்ச்சியில் செய்தி சேகரிப்பதற்குச் சென்ற ஊடகவியலாளர்கள் கடும் கெடுபிடிகளுக்கும் நெருக்கடிகளுக்கும் உள்ளாக்கப்பட்டனர்.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் நெதர்லாந்து அரசாங்கத்தின் இலகு கடன் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட நவீன வசதிகளுடன் கூடிய விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு கட்டடத் தொகுதியை நேற்றையதினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் செய்தி சேகரிப்பதற்காகச் சென்ற ஊடகவியலாளர்களுக்கே அனுமதிமறுக்கப்பட்டுள்ளது. கொழும்பில் இருந்து ஊடக நிறுவனங்களினால் பரிந்துரைக்கப்பட்ட அவர்கள் சார்ந்த நான்கு ஊடகவியலாளர்களுக்கே அனுமதி வழங்கும் அறிவுறுத்தல் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினருக்கு வழங்கப்பட்டிருந்தது. பின்னர், வடமாகாண ஆளுநரின் ஊடகப்பிரிவு இணைப்பாளரின் தலையீட்டையடுத்து ஊடகவியலாளர்கள் நிகழ்வுக்கு அனுமதிக்கப்பட்டனர். (ம-26-110)

### கலந்துரையாடல்

குப்பிழான் வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் மற்றும் திருப்பணி வேலைகள் தொடர்பான கலந்துரையாடல் கூட்டம் இன்று சனிக்கிழமை மாலை 3.30 மணியளவில் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது. (ம-66)

நகைகள் திருட்டு எதிரொலி

# கதிர்காமம் ஆலய காப்பாளர்கள் இருவர் ஆலய விவகாரத்தில் தலையிடத் தடை!

கொழும்பு, மார்ச் 23

கதிர்காமக் கந்தன் ஆலயக் காப்பாளர்கள் இருவர் பதவி நீக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் ஆலயத்தின் விவகாரங்களில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தலையிடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பக்தர் ஒருவர் நேர்த்திக்கடனாகச் செலுத்திய 3.8 மில்லியன் ரூபா பெறுமதியான நகைகள் கையாடப்பட்ட குற்றச்சாட்டிலேயே அவர்கள் இருவரும் ஆலயத்தின் விவகாரங்களில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தலையிடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ம-6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 05 . 1930



மறைவு 22 . 03 . 2024

## செல்வி கந்தையா வாலாம்பிகை

(ஓய்வுநிலை ஆசிரியர்-தையிட்டி கணேஸ்வர வித்தியாசாலை, இணுவில் சைவபிரகாச வித்தியாசாலை, கும்புறுப்பிட்டி மகாவித்தியாலயம் திருகோணமலை, ஓய்வுநிலை அதிபர் திருக்கேதீஸ்வரம்-கௌரியம்பாள் மகாவித்தியாலயம்)

8/4, புகையிரத வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்ட செல்வி கந்தையா வாலாம்பிகை அவர்கள் 22.03.2024 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-சின்னம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா தெட்சனாமூர்த்தி, கலியுகநாதன் தையல்நாயகியின் அன்புச் சகோதரியும், நடராஜா கலியுகநாதனின் மைத்துனியும், தர்ச்சனா பிரபாகரனின் பெரியதாயும் (கோண்டாவில்), அழகரத்தினம் பிரபாகரனின் மாமியாரும் (கோண்டாவில்), பிரபாகரன் ஆத்விகாவின் பேர்த்தியும் (கோண்டாவில்), காலஞ்சென்ற இளையதம்பியின் மருமகளும், இளையதம்பி அன்னலட்சுமியின் மருமகளும் (கொக்குவில்), கைலேஸ்வரன் (கொக்குவில்), லோகேஸ்வரன் (Italy), விஜயலட்சுமி (Swiss), ஆகியோரின் மைத்துனியும், கைலேஸ்வரன் கிருபாமலரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24.03.2024 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

8/4, புகையிரத வீதி, நீராவியடி
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 851 4016, 077 620 1906

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 22.02.2024 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு

அமரர்

## செல்வராசா சிவனேஸ்வரி

தோற்றம் 11.02.1947 — மறைவு 22.02.2024

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (23.03.2024) சனிக்கிழமை காலை 5.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அதனைத்தொடர்ந்து முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய சபிண்டீகரண மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்தியடி,
தம்பர்மலை

(ம 54467 (N)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபாநாயகர் நடத்துவது குடும்ப ஆட்சியின் உச்சம்

## நாடாளுமன்றில் அநுர கடும் தாக்கு

**கொழும்பு, மார்ச் 23**

**சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன மிகமோசமான வகையில் குடும்ப ஆட்சியை முன்னெடுத்து வருகின்றார் என்று ஜே.வி.பி.யின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.**

சபாநாயகர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பான உரையின்போதே அநுர இவ்வாறு தெரிவித்துள்ளார். அநுரகுமார மேலும் தெரிவித்ததாவது:-

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தீவிரமான முறையில் குடும்ப ஆட்சியை மேற்கொண்டு வருகின்றார். சபாநாயகரின் சகோதரன் வசந்த யாப்பா அபேவர்த்தன சபாநாயகரின் தனிப்பட்ட செயலாளராகச் செயற்படுகின்றார்.

இன்னொரு சகோதரரான சரத் யாப்பா அபேவர்த்தன சபாநாயகரின் இணைப்புச் செயலாளராகச் செயற்படுகின்றார். சபாநாயகரின் மைத்துனர் பிரேமானந்த குமாசாரு இன்னொரு இணைப்புச் செயலாளராகவுள்ளார்.

சபாநாயகரின் இன்னொரு சகோதரன் இந்துனில் யாப்பா அபேவர்த்தன ஊடகச் செயலாளராக கடமையாற்றுகிறார். சபாநாயகரின் மகன் சமீர யாப்பா அபேவர்த்தன பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தராக உள்ளார். இந்த நியமனங்களைவிட, சபாநாயகரின் இன்னொரு மகன் தேசிய லொத்தர் சபையின் தலைவராக நிதியமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார். சபாநாயகர் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளும்போது அவரது குடும்பத்தினரும் சபாநாயகருடன் பயணிக்கின்றனர். தனது பிரதேச அபிவிருத்திக்குழுத் தலைவராகவும் சபாநாயகர் செயற்படுகிறார். இப்படிப்பட்டவர்களை அடுத்த தேர்தலில் மக்கள் நிராகரிக்கவேண்டும் - என்றார். (ம-6)

# அருங்காட்சியகங்களிலேயே எம் பண்பாட்டுப் பொருள்கள்

## பசுமை அழிவுக்கு இதுவே காரணம்

## ஜோன் குயின்ரஸ் ஆதங்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

அன்றைய காலத்தில் எங்கள் மூத்தோர்களின் சிந்தனையின் வெளிப்பாடுகளாக விளங்கிய பண்பாட்டுப் பொருள்களை இன்று அரும்பொருட் காட்சியகங்களிலேயே காணமுடிகிறது. தமிழ்மக்கள் மத்தியிலிருந்து அருகிவரும் இந்தப் பழக்கவழக்கங்களே தற்காலத்தின் இயற்கை பசுமை அழிவுகளுக்கு வழிகோலுகின்றன.

-இவ்வாறு தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற 'பசுமை அமைதி விருதுகள் வழங்கல்' நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையில் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வீடுகளுக்கு வீடு முன்னர் தீவனத் தொட்டிகள், பொலிகல்லால் செய்யப்பட்ட நீர்த்தொட்டிகள் அமைக்கப்பட்டு வீதியால் செல்லும் மனிதர்களுக்கும், உயிரினங்களுக்கும் நீர் நிரப்பிவிடுகின்ற பண்பு தமிழ்மக்கள் மத்தியில் இருந்தது.

அத்துடன் சுமை தாங்கிகள், ஆவுரஞ்சிக் கற்கள், இளைப்பாறு மடங்கள் என்பனவும் வீதிகளில் அமைந்திருந்தன. இவற்றை இன்றையகாலத்தில் அரும்பொருட் காட்சியகங்களில் தான் காண முடிகிறது. அத்தோடு இன்றைய தலைமுறையினர் பெரும்பாலானோருக்கு அவை பற்றித் தெரியாது.

மரக்கன்றுகளை நடுகை செய்வதற்குக் கூட சங்கங்களை அமைக்கவேண்டிய தேவை இப்போது வடக்கில் எழுந்துள்ளது - என்றார். (ச-66)

# 'உதய வாழ்வு' ஏற்பாட்டில் மகளிர் தின நிகழ்வுகள்



'உதயவாழ்வு' வாழ்க்கைத் திறன் மேம்பாட்டு நிறுவனத்தினூடாக இலவச தையல் பயிற்சிபெறும் மாணவிகளின் மகளிர்தினம் வட்டுக்கோட்டையில் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக உதயன் குழுமத் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், உதயவாழ்வு வாழ்க்கைத் திறன் மேம்பாட்டு நிறுவனத்தின் இயக்குநருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்களான பரமானந்தவள்ளி, தவமணி, முன்னாள் தவிசாளர் நாகரஞ்சினி, தையல் பயிற்சி ஆசிரியை அமராவதி, மாணவிகள், உதயவாழ்வு வாழ்க்கைத் திறன் மேம்பாட்டு நிறுவனத்தின் பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-125)

# புலம்பெயரிகளின் முதலீடுகளை வரவேற்கிறோம்

புலம்பெயர் உறவுகளின் முதலீடுகளை வரவேற்பதாக வடக்கு மாகாண ஆளுநர், இலங்கைக்கான நியூஸிலாந்து துணைத்தூதுவரிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான நியூஸிலாந்து துணைத் தூதுவர் அன்ரேவ் ட்ராவெள்ளர், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸை வடக்கு ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினார்.

வடக்கு மாகாணத்தில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் இலங்கைக்கான நியூஸிலாந்து துணைத் தூதுவர் ஆளுநரிடம் கேட்டறிந்துகொண்டார்.

மாகாணத்தின் கல்வி, பொருளாதார, வாழ்வியல்நிலை தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் காணி விடுவிப்பு, மீள்குடியேற்றம், சுற்றுலாத்துறை அபிவிருத்தி போன்ற விடயங்கள் தொடர்பிலும், முதலீட்டு வலயங்களை உருவாக்குதல் தொடர்பிலும் ஆளுநரால் தெளிவுபடுத்தப்பட்டது. (ஓ-26)

# வாய்ப்புற்றுநோயால் தினசரி மூவர் பலி!

யாழ்ப்பாணம், மார்ச் 23

வாய்ப்புற்றுநோய் பாதிப்பால் தினசரி மூவர் உயிரிழப்பதுடன், 6 நோயாளர்கள் புதிதாக அடையாளம் காணப்படுகின்றனர் என்று சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வெற்றிலை, புகையிலை உள்ளிட்டவற்றைப் பயன்படுத்துவதன் காரணமாக பெரும்பாலான இளைஞர்கள் வாய்ப் புற்றுநோயால் பாதிக்கப்படுவது அதி கரித்து வருகின்றது என்றும் இலங்கை பல் மருத்துவ சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (அ-ச)


# மரண அறிவித்தல்

தோற்றம்
18 . 10 . 1978



மறைவு
21 . 03 . 2024

**விசுவநாதர் இளம்பிறைநாதன்**

இடைக்குறிச்சி கிழக்கு, வரணியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட விசுவநாதர் இளம்பிறைநாதன் அவர்கள் கடந்த (21.03.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவநாதர் - சிவகாமிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், மதிவதனி மற்றும் திலகேஸ்வரன் ஆகியோரின் சகோதரரும், சிறிவிஸ்வநாதன் (UK) அவர்களின் மைத்துனரும், சர்மிலன், சரண்ஜன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.03.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 07.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொடிகாடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

இடைக்குறிச்சி கிழக்கு, வரணி. குடும்பத்தினர்
076 089 2368

(CR 41986) S-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகள் துஷ்பிரயோகம்: கைதானார் தந்தை!

வவுனியா, மார்ச் 23

வவுனியா - தோணிக்கல் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 14 வயதுச் சிறுமி பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட நிலையில், சிறுமியின் தந்தை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்ட சிறுமி, சக மாணவியூடாக தனது ஆசிரியருக்கு விடயத்தைத் தெரியப்படுத்தியுள்ளார். இதையடுத்து பாடசாலைச் சமூகத்தால் வவுனியா பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்ட நிலையில், மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சிறுமியின் தந்தையைக் கைதுசெய்தனர். சிறுமி வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-18)

## பொதுமக்கள்...

காணிகள் விடுவிக்கப்பட்ட பின்னர், அந்தக் காணிகளில் 'பொதுமக்களுக்கு ஒத்தாசையாக முப்படையும் செயற்படும்' என்ற ஜனாதிபதியின் அறிவித்தல் தொடர்பில் உரிய தெளிவூட்டலையும் முப்படையினர் பங்குபற்றல் தொடர்பான வரையறைகளையும் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் வழங்கவேண்டும் என்று பொதுமக்களும் விவசாயிகளும் வலியுறுத்தியுள்ளனர்.

பொதுமக்களுக்கு காணி உரிமம் வழங்கும் 'உறுமய' வேலைத்திட்டம் யாழ்ப்பாணம் - ஒட்டகப்புலம் பகுதியில் நேற்று நடைபெற்றது. இந்தத் திட்டத்தின் கீழ், 408 பேருக்கு 235 ஏக்கர் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

நிகழ்வில் ஜனாதிபதி ரணில் மேலும் தெரிவித்ததாவது:-

எந்த இனத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அனைவருக்கும் காணி உரிமை கிடைக்கவேண்டும். அதற்காக 'உறுமய' வேலைத்திட்டம் அண்மையில் தம்புள்ளையில் ஆரம்பிக்கப்பட்டது. இன்று ஒரு சிலருக்கு மாத்திரம் அதன் பயன் கிடைத்திருந்தாலும் ஜூன் மாதமளவில் அந்த வேலைத்திட்டத்தை முழுமையாக நிறைவு செய்யுமாறு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளேன்.

மேலும் விவசாயத்தை நவீனமயமாக்கும் திட்டத்தையும் தொடங்கியுள்ளோம். இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பிரதேச செயலகத்தை தெரிவு செய்துள்ளோம். இது யாழ்ப்பாணத்தில் கோப்பாயில் செயற்படுகின்றது. இதன் மூலம், இந்த மாவட்டம் நவீன விவசாயத்தைப் பெறுகிறது. அதேசமயம் வருமானமும் அதிகரிக்கிறது.

போரின் பின்னர் பெருமளவிலான காணிகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் எடுக்கப்படவேண்டியிருந்தது. இதுவரை 31ஆயிரம் ஏக்கர் அரச காணிகளையும், 24 ஆயிரம் ஏக்கர் தனியார் காணிகளையும் அரசாங்கம் விடுவித்துள்ளது. இதர விடுவிப்புகள் உட்பட மொத்தம் 63 ஆயிரம் ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும் கடற்படையின் கட்டுப்பாட்டில் இருந்த ஆயிரத்து 800 ஏக்கர் அரச காணி விடுவிக்கப்பட்டுள்ளதுடன், 856 ஏக்கர் தனியார் காணிகளும் விடுவிக்கப்பட்டுள்ளன.

சில நாள்களுக்கு முன்னர், 101 ஏக்கர் காணி மக்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இன்று 234 ஏக்கர் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தக் காணிகள் அனைத்தும் நவீன விவசாயத் திட்டத்துக்காக உரிமையாளர்களால் பயன்படுத்தப்பட வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளோம். இதை அவர்களால் தனியாகச் செய்ய முடியாது என்பதால், அவர்களுக்குத் தேவையான ஆதரவை வழங்க முப்படைகளும் இணைந்து செயற்படவுள்ளன - என்றார்.

நிகழ்வில், மகா சங்கத்தினர் தலைமையிலான ஏனைய மதத் தலைவர்கள், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர்களான சுரேன் ராகவன், காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன், வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன, பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே, கடற்படையின் வடக்குத் தளபதியர் அட்மிரல் காஞ்சன பானகொட, பலாலி விமானப்படைத் தளத் தளபதி கப்டன் சமிந்த ஹேரத் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (அ-ம-26)

## முதலீட்டு...

ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:-

போரின் பின்னர் ஏற்பட்ட பிரச்சினைகளை நாம் தற்போது தீர்த்து வருகின்றோம். நாங்கள் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஆரம்பித்தோம். அதனுடன் நாம் எமது செயற்பாடுகளை மட்டுப்படுத்திவிடவில்லை. மக்களைப் பாதிக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுவழங்கவேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாகவுள்ளது. மேலும் மக்களின் வருமான மூலங்கள் அதிகரிக்கப்படவேண்டும். எனவே, வடமாகாணத்தில் புதிய பொருளாதாரத்தை உருவாக்கி வருகிறோம். வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரை விவசாயத்தை ஊக்குவிக்கவும், வடக்கு மாகாணத்தில் உள்ள சூரிய சக்தி மற்றும் காற்றாலை சக்தியை பயன்படுத்தவும் திட்டமிட்டுள்ளோம். அதற்கு இந்தியாவுடன் ஒத்துழைக்க வேண்டும் என்பதே எங்களது எதிர்பார்ப்பு. இதன் மூலம் சுற்றுலாத் தொழில் மற்றும் மீன்பிடித் தொழிலையும் ஊக்குவிக்கமுடிகிறது. மேலும், முதலீட்டு வலயங்களுக்கும் காணி ஒதுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஐந்து தொடக்கம் 10 வருடங்களுக்குள் இந்தச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி வடக்குக்கு வலுவான பொருளாதாரத்தை வழங்குவதற்காக நாம் செயற்பட்டு வருகின்றோம் - என்றார். (அ-ம-26)

## யாழ்ப்பாண...

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்துக்கு அருகாக, கடந்த 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. போராட்டத்தின் நான்காம் நாளான நேற்று, சம்பவ இடத்துக்கு வருகைதந்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி முதலமைச்சர்களுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது என்றும், சில உறுதிமொழிகள் பெறப்பட்டுள்ளன என்றும் வழங்கிய வாக்குறுதியையடுத்தே போராட்டம் கைவிடப்பட்டது.

போராட்டத்தின் மூன்றாம் நாளான நேற்றுமுன்தினம் மீனவர்களைப் பரிசோதித்த மருத்துவர், அவர்களின் உடலில் நீர்ச்சத்துக் குறைந்து செல்கின்றது என்றும் இது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் எச்சரித்திருந்தார். இதையடுத்து, உணவு தவிர்ப்பில் ஈடுபட்ட மீனவர்களுக்கு ஆதரவாக தும்பளை, கொட்டடி, சேந்தான்குளம், குருநகர், மாதகல், பலாலி, தையிட்டி, சக்கோட்டை, மயிலிட்டி, வளலாய், வலித்தூண்டல் மற்றும் சீத்திப்பந்தல் ஆகிய கடற்றொழில் சங்கங்களைச் சேர்ந்த மீனவர்கள் நேற்றுக் குவிந்தனர். இதனால் ஒருவித பதற்றநிலை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-27)

## சிகிச்சையிலிருந்து...

யோடியவர் மருத்துவமனையின் பின்வீதியில் வீழ்ந்து உயிரிழந்தார்.

கொக்குவில், நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த பஞ்சலிங்கம் தினேஷ் என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

வாந்தி மற்றும் வயிற்றோட்டம் காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த அவர், நேற்று மருத்துவமனையில் இருந்து தப்பியோடிய நிலையில் உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## அவசர...

நெதர்லாந்து தூதுவர் ஆகியோரால் நேற்று மாலை திறந்து வைக்கப்பட்டது.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் நெதர்லாந்து அரசாங்கத்தின் இலகு கடன் திட்டத்தின் கீழ் மூன்று மாடிகளைக் கொண்டதாக நானூறு கோடி ரூபா செலவில் புதிய விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு அமைக்கப்பட்டது.

இந்தக் கட்டடத் தொகுதியில் அவசர சிகிச்சைப் பிரிவு, தீவிர சிகிச்சைப் பிரிவு, ஐந்து சத்திர சிகிச்சைக் கூடங்கள், சிறுநீரக நோயாளர்களுக்கான குருதி சுத்திகரிப்புப் பிரிவு, கதிரியக்கப் பிரிவுகள், சிறுவர்களுக்கான சிகிச்சைப் பிரிவு, நோயாளர் தங்கும் விடுதிகள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்தக் கட்டடத் தொகுதியே ஜனாதிபதியாலும் நெதர்லாந்துத் தூதுவராலும் நேற்று மாலை திறந்து வைக்கப்பட்டது. (அ-ம-100)

## வலி.வடக்கு...

உதவிகளைச் செய்யவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகின்றது.

'பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ்' என்று அறியப்படும் அந்த அறக்கட்டளை நவீன விவசாயம் தொடர்பான அறிவியல் தகவல்களை வழங்குவதிலும், விவசாயிகளைப் பயிற்றுவிப்பதிலும், உற்பத்திப்பொருள் விற்பனையிலும் தனது தலையீட்டைச் செலுத்தலாம் என்று கருதப்படுகின்றது. (அ-ம-26)

## சிகிச்சைக்கு...

குறித்த நபருக்கு நேற்றுமுன்தினம் சுகவீனம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அயலவர்கள் அம்புலன்ஸ்மூலம் அவரை மருத்துவமனையில் சேர்க்க நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர். எனினும், அவர் சிகிச்சைக்குச் செல்ல மறுப்புத் தெரிவித்திருந்தார். இதையடுத்தே அவர்நேற்று சடலமாகமீட்கப்பட்டுள்ளார். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-18-110)

## ஈஸ்டர்...

கோரிக்கை விடுத்தால் அதனை வெளிப்படுத்துவதற்கு நான் தயார். அவ்வாறு வழங்கப்படும் தகவலை இரகசியமாக வைத்திருக்கவேண்டியது நீதியின் பொறுப்பாகும்" - என்றார். (அ-ம-44)

## துப்பாக்கி...

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கு அமையவே இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சந்தேகநபர் 23 வயதுடையவர் என்றும் அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-110)

## பால்...

சிசு ஏற்கனவே இறந்துவிட்டதை மருத்துவர்கள் உறுதிப்படுத்தினார்கள்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சென்னை சுப்பர் கிங்ஸிடம் சரணடைந்தது பெங்களூர்!

சென்னை, மார்ச் 23

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸை இலகுவாகத் தோற்கடித்தது சென்னை சுப்பர் கிங்ஸ்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூரு றோயல் சலஞ்சர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. சென்னை சுப்பர் கிங்ஸின் வயிற்றில் புளியைக் கரைக்கக்கூடிய வகையிலான ஆரம்பத்தைக் கொடுத்தார் பெங்களூர் அணியின் தலைவர் டுபிளஸி. மூன்றே ஓவர்களில் 33 ஓட்டங்களைப் பெற்றது பெங்களூர். ஆனால் அதன் பின்னர் ஒரே ஓவரில் டுபிளஸி மற்றும் படிதரை வெளியேற்றி சென்னையின் பக்கம் ஆட்டத்தைத் திருப்பினார் முஷ்டபிஷுர் ரஹ்மான். ஓட்டமெதையும் பெறாமல் மக்ஸ்வெலை வெளியேற்றினார் தீபக் சாகர். கோலியின் இன்னிங்ஸும் 21 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது. இதற்காக அவர் 20 பந்துகளை எடுத்துக்கொண்டார். பெங்களூர் அணி 150 ஓட்டங்களையே பெறுவது கடினம் என்று கருதப்பட்ட நிலையில், டினேஸ் கார்த்திக் மற்றும் அனுஜ் ராவட் இருவரும் இணைந்து அதிரடியான இணைப்பாட்டத்தை வழங்கி அணியை மீட்டெடுத்தனர். சென்னை அணியின் வீரர் தேஷ்பாண்டே ஓட்டங்களை வாரி வழங்கிக் கொண்டிருந்தார். அனுஜ் ராவட் 25 பந்துகளில் 48 ஓட்டங்களையும், டினேஸ் கார்த்திக் 26 பந்துகளில் 38 ஓட்டங்களையும் பெற முடிவில் 6 விக்கெட்களை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது பெங்களூர்.

பந்துவீச்சில் முஸ்டபிஸுர் ரஹ்மான் 4 விக்கெட்களையும், தீபக் சகர் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய சென்னை அணிக்கு, ஆரம்ப வீரர்களான கெய்க்வாட் மற்றும் ரச்சின் ரவீந்திர இருவரும் அற்புதமான ஆட்டத்தை வழங்கினார்கள். குறிப்பாக 15 பந்துகளில் 37 ஓட்டங்களைக் குவித்து ஓட்டச்சராசரிச் சிக்கலை இல்லாமலாக்கினார் ரச்சின். அஜிங்கிய ரகானே, டாரி மிச்செல் என அனைவருமே வெற்றிக்குத் தேவையான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தனர். இறுதிக்கட்டத்தில் ஜடேஜா மற்றும் துபே நிதானமாகவும் தேவைப்படும்போது அதிரடியாகவும் விளையாடி அணியைக் கரைசேர்த்தனர். முடிவில் 8 பந்துகள் மீதமிருக்க பெங்களூரைத் தோற்கடித்தது சென்னை. (ம)

# ரங்கன் கிராமத்துக்கு பேருந்துச் சேவை

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ரங்கன் குடியிருப்பு கிராமத்துக்கு நீண்டகாலத்தின் பின் பேருந்துச் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது. கிராமமக்கள் நீண்டகாலமாகத் தமது கிராமத்துக்கான பேருந்துச்சேவையை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்த மைக்கமைய கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் குறித்த தனியார் பேருந்துச் சேவை முன்னெடுக்கப்பட்டது.

ஆரம்ப நிகழ்வில் பாடசாலை அதிபர், பிரதேச மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ப)


**வாகனம் விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள Mahindra Maximo வடி வகை வாகனம் விற்பனைக்கு உண்டு. (CS/54481) J-1

070 521 2138

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை
சுவாமியார் வீதியில் அந்தோனியார்
கோவிலில் இருந்து 350m தூரத்தில்
3 பரப்புக் காணியுடனான
வீடு விற்பனைக்கு உண்டு.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
(தரகர் தொடர்பு கொள்ள வேண்டாம்) (CS/28313) J-1

தொடர்பு:- 077 614 6434

**தவறவிடப்பட்டது**

மானிப்பாய் மருதடி விநாயகருக்கு
அண்மையில் உள்ள வீதியில்
தேசியஅடையாள அட்டை (841521854v)
சாரதி அனுமதிப் பத்திரம்,
வங்கிஅட்டைகளுடன் எனது மணிபேஸ்
தொலைந்துவிட்டது
கண்டெடுத்துத் தருபவருக்கு
தக்க சன்மானம் வழங்கப்படும். (CS/283304) J-1

தொடர்பு:- 077 378 1397

புதிய நிர்வாகத்தின் கீழ் புதுப்பொலிவுடன்
மாலை திருமணசேவை

1990 இல் பிறந்த கனடாவில்
வசிக்கும் பெண்ணுக்கு
உள்நாட்டில் வரன் தேவை.
(அனைத்து விதமான வரன்
தெரிவுகளுக்கும் அழையுங்கள்)

தொடர்பு:- 076 315 2984

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் திருநெல்வேலி
அம்மாச்சி உணவகத்திற்கு முன்பாக
1 3/4 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தரகர்கள் தொடர்பு கொள்ளவேண்டாம்.

தொடர்பு:- 076 206 1703

**வேலையாள்கள் தேவை**

தச்சுவேலை பழக விருப்பம்
உடையோர். வாகன சாரதி
(TATA xanon) என்பவற்றுக்கு
எமது நிறுவனத்திற்கு
வேலையாட்கள் தேவை.
தங்குமிட வசதி உண்டு.

பிறவுண் றோட் [கலட்டி]
077 367 7099

**காணி விற்பனைக்கு உண்டு**

**நெல்லியடி நகரத்தில் 10 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- நெல்லியடி நகரத்திலிருந்து 2 km தூரத்தில்
- விக்கினேஸ்வரா வித்தியாலயத்திலிருந்து 500m தூரத்தில்
- உச்சி அம்மன் கோயில் அருகாமையில்
- 16 அடிப்பாதையுடன் இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பெற்றோல் செற் முன் வீதியில் 2 Km தூரத்தில் நெல்லியடி
- பொலிஸ் நிலைய அருகாமை வீதியில் 2 Km தூரம்
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை ஐந்து இலட்சம் ரூபாய் மட்டும் (500 000/=)

பார்வையிடும் நேரம் காலை 8.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

தொடர்பு: 071 173 3911 / 076 853 5022 (CS24035)) (N-1)

**கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில்...**

**33 வருடகால பூர்த்தியை முன்னிட்டு மலிவு விலையில்**

புறொயிலர், கல்பேட், ஊர்ச்சேவல், பேரன்ஸ், முட்டைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளமுடியும்

* 24 மணிநேர சேவை
* யாழ். மாவட்டம் முழுவதும் Transport இலவசம்
* முட்டை சில்லறை - 40 /= (Mediam)
  மொத்தம் - 39 /= (Mediam)
* பெரிய முட்டை சில்லைறை - 44/=
  மொத்தம் - 43/=
* Halal Fresh Chicken (ஹலால் இறைச்சி)
* புறொயிலர் இறைச்சி - 1250 /=
* புறொயிலர் இறைச்சி மொத்தமாக - 1100 /=
* கல்பேட் - 1kg- 1000 /=
* பேரன்ஸ் - 1 kg இறைச்சி 1400/=
* ஊர்க்கோழி -1 kg 1250 /=

(cs.28322) (N-1)

**New City Farm**
8,8A Sinnakadai Market, Jaffna,
T.P.: 021 430 3354 / 076 3593354

**கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு**



ரஞ்சனாஸ் (Ranjanas) நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட உயர் தரத்திலான தரை மற்றும் சுவர் ஓடுகள் (Tiles) இப்பொழுது எம்மிடம். கண்கவர் வண்ணங்களிலும், கவர்ச்சிகரமான விலையிலும் அத்துடன் அனைத்து வகை குளியலறை சாதனங்களும் பொருத்துகளுடன் பெயின்ட் (Paint) வகைகளையும் எம்மிடம் வாங்கலாம். பழைய இருப்புகளுக்கு 50 % விலைக்கழிவும் வழங்கப்படும்.

"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"

**ஆர்க் . என் . கம்பனி**

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். - 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். - 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன் - 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 973 9917 (CS.54483) (n-1)


விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்... அச்சகத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org